Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38 of 2025**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.2 (L.W.2 ) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | திரு.முருகன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 25.03.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பொப்பிடி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 6, 7 மாதங்களுக்கு முன்பு அதிகாலை 4.30 மணியளவில் நான் என் வீட்டிற்கு வெளியே படுத்து கொண்டிருந்தேன். அப்போது டமார் என்று சத்தம் கேட்டது. நான் விபத்து என்று போய் பார்த்தேன். அப்போது ஒரு காரும், ஒரு தோஸ்த்தும் மோதி கொண்டிருந்தது. அப்போது தோஸ்த்து வண்டியில் ஒரு நபர் அடிப்பட்டு இருந்தார். ஒரு நபர் கீழே விழுந்து இருந்தார். இருவரையும் ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**.குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் 12.05.2024ம் தேதி விடியற்காலை சுமார் 04.30மணிக்கு நான் எனது வீட்டின் வாசலில் கட்டிலில் படுத்து கொண்டிருந்தேன் என்றும், அப்போது எங்க வீட்டிற்கு எதிர் புறமுள்ள ராஜேந்திரன் நிலத்திற்கு அருகே தார் ரோட்டின் ஓரம் ஒரு காரும் ஒரு நான்கு சக்கர வாகனமும் மோதிய சத்தம் கேட்டும் ஆட்கள் கத்தும் சத்தம் கேட்டும் ஏதோ ஒரு

வாகனத்தில் தொடர்ந்து ஆரன் அடித்துக் கொண்டிருந்த சத்தம் கேட்டும் நான் என்னவோ ஏதோ என்று பார்ப்பதற்காக சென்றேன் என்றும், அப்போது எங்க பக்கத்து வீட்டை சேர்ந்த பெருமாள் மகன் கிருஷ்ணனும் என்னமோ ஏதோ என்று என்னுடன் வந்தார் என்றும், நாங்கள் இருவரும் விபத்து நடந்த இடத்திற்கு போய் பார்த்த போது ஒரு நபர் TN 29 L 4664 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்து பிறகு எழுந்து ஓடினார் என்றும்,

2) அவரை மூன்று நபர்கள் கத்தி, கம்பி மற்றும் தொன்னையை எடுத்துக் கொண்டு இந்த தேவடியா பையன் தப்பிச்சிடாண்டா இவன விடக்கூடாது போட்டு தள்ளுங்கடா என்று சொல்லி கொண்டு துரத்தினார்கள் என்றும், நாங்கள் இருவரும் சென்றதை பார்த்த அவர்கள் மூவரும் ஓடி விட்டார்கள் என்றும், பிறகு நாங்கள் விபத்து நடந்த இடத்தில் போய் பார்க்க விபத்து ஏற்படுத்திய TN 24 S 6951 INDIGO என்ற காரில் இருந்த இரண்டு பேர் எங்களை பார்த்தவுடன் காரில் இருந்து இறங்கி ஓடி விட்டார்கள் என்றும், ஓடிய நபர்களில் இருவர் இரு சக்கர வாகனத்தில் தப்பித்து சென்று விட்டார்கள் என்றும், பிறகு விபத்து ஏற்படுத்திய TN 24 AR 5449 என்ற தோஸ்து

வண்டியில் இருந்து யாரோ கத்தும் சத்தம் கேட்டு நாங்கள் போய் பார்க்க கால்களில் அடிப்பட்டு இறங்க முடியாமல் இருந்தார் என்றும்,

3) இரு சக்கர வாகனத்தில் சென்று விழுந்த நபரை பார்க்க அவர் முகத்திலும், தோள் பட்டையிலும் அடிப்பட்டு இருந்தது என்றும், அவரை விசாரிக்க தான் பாலக்கோடு தீர்த்தகிரி நகரை சேர்ந்த பெருமாள் மகன் கோவிந்தன் என்றும், தனக்கும் பாலக்கோடு கோர்ட்டில் வக்கீல் வேலை செய்யும் கோவிந்தசாமிக்கும் நிலப்பிரச்சனை தொடர்பாக இருந்த முன் விரோதம் காரணமாக என்னுடைய நிலத்தை அபகரித்துக் கொண்டு என்னை கொலை செய்ய திட்டம் போட்டு விபத்தில் நான் அடிப்பட்டு இறந்து விட்டதாக நம்ப வைக்க கோவிந்தசாமி வக்கீல் அவருடைய ஜீனியர்களை வைத்துக் கொண்டு தன்னை கொலை செய்ய திட்டம் போட்டதாகவும், தான் அதிஷ்ட வசமாக தப்பித்துக் கொண்டதாகவும், அவர்களிடமிருந்து தன்னை காப்பாற்ற வேண்டியும் கெஞ்சி கேட்டுக் கொண்டார் என்றும்,

4) அப்போது கோவிந்தன் அவருடைய மனைவி மகனுக்கும் போன் செய்தார் என்றும், அவர்கள் இருவரும் சிறிது நேரத்தில் அங்கு வந்து விட்டார்கள் என்றும், நானும் கிருஷ்ணனும் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவிந்தனையும் தோஸ்த் நான்கு சக்கர வாகனத்தில் அடிப்பட்டு கிடந்த பின்னால் பெயர் கேட்டுத் தெரிந்த கார்த்திக் என்பவரையும் கோவிந்தன்

மனைவியுடன் சிகிச்சைக்காக பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை .. இல்லை

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38 of 2025**

| | | |
|---|---|---|
| Deposition of P.W.3 (L.W.3 ) | } | Prosecution |
| | } | Defence |
| | } | |

Name of the Witness : திரு.கிருஷ்ணன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 25.03.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பொப்பிடி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு அதிகாலை 4.30 மணியளவில் என் வீட்டு பக்கத்தில் வண்டி ஆக்சிடண்ட் ஆன சத்தம் கேட்டது. அப்போது தோஸ்த்து வண்டியில் டிரைவர் சீட்டில் இருந்த ஒரு நபர் ஸ்டிரிங்கில் அவரது கால் மாட்டியிருந்தது. 10 போ் சேர்ந்து கடப்பாறையை கொண்டு ஸ்டிரிங்கிலிருந்து அவரது காலை எடுத்தோம். அங்கிருந்தவர்கள் யாரோ ஆம்புலன்சை வரவழைத்து இருந்தார்கள். ஆம்புலன்ஸ் வந்தவுடன் அவரை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**.குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் 12.05.2024ம் தேதி விடியற்காலை சுமார் 04.30மணிக்கு நான் எனது வீட்டின் முன்புறம் உள்ள தோட்டத்தில் காலைக்கடன் கழிக்க வந்தேன் என்றும், அப்போது எங்க வீட்டிற்கு எதிர் புறமுள்ள ராஜேந்திரன் நிலத்திற்கு அருகே தார் ரோட்டின் ஓரம் ஒரு காரும் ஒரு நான்கு சக்கர வாகனமும் மோதிய சத்தம் கேட்டும் ஆட்கள் கத்தும் சத்தம் கேட்டும்

ஏதோ ஒரு வாகனத்தில் தொடர்ந்து ஆரன் அடித்துக் கொண்டிருந்த சத்தம் கேட்டும் நான் என்னவோ ஏதோ என்று பார்ப்பதற்காக சென்றேன் என்றும், அப்போது எங்க பக்கத்து வீட்டை சேர்ந்த வீரப்பன் மகன் முருகனும் சத்தம் கேட்டு என்னமோ ஏதோ என்று என்னுடன் கேட்டு நாங்கள் இருவரும் விபத்து நடந்த இடத்திற்கு போய் பார்த்த போது ஒரு நபர் TN 29 L 4664 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்து பிறகு எழுந்து ஓடினார் என்றும்,

2) அவரை மூன்று நபர்கள் கத்தி, கம்பி மற்றும் தொன்னையை எடுத்துக் கொண்டு இந்த தேவடியா பையன் தப்பிச்சிடாண்டா இவன விடக்கூடாது போட்டு தள்ளுங்கடா என்று சொல்லி கொண்டு துரத்தினார்கள் என்றும், நாங்கள் இருவரும் சென்றதை பார்த்த அவர்கள் மூவரும் ஓடி விட்டார்கள் என்றும், பிறகு நாங்கள் விபத்து நடந்த இடத்தில் போய் பார்க்க விபத்து ஏற்படுத்திய TN 24 S 6951 INDIGO என்ற காரில் இருந்த இரண்டு போ் எங்களை பார்த்தவுடன் காரில் இருந்து இறங்கி ஓடி விட்டார்கள் என்றும், ஓடிய நபர்களில் இருவர் இரு சக்கர வாகனத்தில் தப்பித்து சென்று விட்டார்கள் என்றும், பிறகு விபத்து ஏற்படுத்திய TN 24 AR 5449 என்ற தோஸ்து

வண்டியில் இருந்து யாரோ கத்தும் சத்தம் கேட்டு நாங்கள் போய் பார்க்க கால்களில் அடிப்பட்டு இறங்க முடியாமல் இருந்தார் என்றும்,

3) இரு சக்கர வாகனத்தில் சென்று விழுந்த நபரை பார்க்க அவர் முகத்திலும், தோள் பட்டையிலும் அடிப்பட்டு இருந்தது என்றும், அவரை விசாரிக்க தான் பாலக்கோடு தீர்த்தகிரி நகரை சேர்ந்த பெருமாள் மகன் கோவிந்தன் என்றும், தனக்கும் பாலக்கோடு கோர்ட்டில் வக்கீல் வேலை செய்யும் கோவிந்தசாமிக்கும் நிலப்பிரச்சனை தொடர்பாக இருந்த முன் விரோதம் காரணமாக என்னுடைய நிலத்தை அபகரித்துக் கொண்டு என்னை கொலை செய்ய திட்டம் போட்டு விபத்தில் நான் அடிப்பட்டு இறந்து விட்டதாக நம்பவைக்க கோவிந்தசாமி வக்கீல் அவருடைய ஜூனியர்களை வைத்துக் கொண்டு தன்னை கொலை செய்ய திட்டம் போட்டதாகவும், தான் அதிஷ்ட வசமாக தப்பித்துக் கொண்டதாகவும், அவர்களிடமிருந்து தன்னை காப்பாற்ற வேண்டியும் கெஞ்சி கேட்டுக் கொண்டார் என்றும்,

4) அப்போது கோவிந்தன் அவருடைய மனைவி மகனுக்கும் போன் செய்தார் என்றும், அவர்கள் இருவரும் சிறிது நேரத்தில் அங்கு வந்து விட்டார்கள் என்றும், நானும் முருகனும் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவிந்தனையும் தோஸ்த் நான்கு சக்கர வாகனத்தில் அடிப்பட்டு கிடந்த பின்னால் பெயர் கேட்டுத் தெரிந்த கார்த்திக் என்பவரையும் கோவிந்தன்

மனைவியுடன் சிகிச்சைக்காக பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை .. இல்லை

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38 of 2025**

Deposition of P.W.4 (L.W. 4 ) } Prosecution } Defence }

Name of the Witness : திருமதி.துளசி

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 25.03.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குசுமுச கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என் கணவர் ஆடு வியாபாரம் செய்து வருகிறார். சுமார் *1 1/*

2 வருடத்திற்கு முன்பாக என் கணவா் 4 மணியளவில் பைக்கில் சந்தைக்கு போனார். என் கணவர் 5 மணியளவில் எனக்கு போன் செய்து பொப்பிடி பக்கம் என்னை வக்கீல் கோவிந்தசாமி அடித்து விட்டதாகவும் உடனே வரச்சொன்னார். நானும், என் மகன் பெரியசாமியும் அங்கு போனோம். அங்கு காரும், பிக்கஅப் வண்டியும் மோதி கொண்டிருந்தது. நான் பார்க்கும் போது பிக்கஅப்பில் ஒரு தம்பி காரில் ஸ்டேரிங்கில் மாட்டி கொண்டிருந்தார். நான் போய் அவரையும், என் கணவரையும் காப்பாற்றி ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து போனேன்.

2) வக்கீல் கோவிந்தசாமியின் செல்போனை என் கணவர் போலிசிடம் கொடுத்தார். எங்களுக்கும், வக்கீல் கோவிந்தசாமிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. சொத்தை பிடுங்குவதற்காக தான் என் கணவரை கோவிந்தசாமி வழக்கறிஞா் அடித்து விட்டார். சாட்சி 1ம் எதிரியை அடையாளம் காட்டுகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் கணவரை தாக்கியது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு தகவல் கிடைத்து நானும், என் மகனும் மட்டும் தான் அங்கு போனோம், என் உறவினர்கள் யாரும் வரவில்லை. இந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் மேற்சொன்ன குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38 of 2025**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W.5 (L.W. 5 ) | } | Defence |
| | } | |

Name of the Witness : திரு.பெரியசாமி

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 25.03.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது குசுமுசநெட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பழ வியாபாரம் செய்து வருகிறேன். என் அப்பா விவசாயம், ஆடு வியாபாரம் செய்து வருகிறார். *12.05.2024* அதிகாலை 4.30 மணிக்கு என்

அப்பா நம்பரிலிருந்து எனக்கு போன் வந்தது. என் அம்மா தான் பேசினார். ஏதோ ஆக்சிண்ட் நடந்து விட்டதாக சொன்னார்கள். நானும், என் அம்மாவும் பொப்பிடி - மாரண்டஅள்ளி போகும் வழியில் போய் பார்த்தோம். என் அப்பாவிற்கு அடிப்பட்டு இருந்தது. அங்கு ஒரு காரும், தோஸ்த்தும் மோதி கொண்டிருந்தது. தோஸ்த்து வண்டியில் ஸ்டிரேங்கில் ஒரு நபரின் கால் மாட்டி கொண்டிருந்தது. ஆரன் அடித்து கொண்டே இருந்தது. என் அப்பா ரூவீலா் பக்கத்தில் விழுந்து இருந்தார். ஆம்புலன்சுக்கு தகவல் சொன்னோம். தோஸ்த்து வண்டியில் இருந்த நபரையும், என் அப்பாவும் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அனுப்பி வைத்தோம்.

என் தாத்தாவின் அப்பா பெயரில் நிலம் இருந்தது. அதை அளப்பதற்கு கோவிந்தசாமி வழக்கறிஞா் வந்தார். நாங்கள் எங்கள் நிலத்தை ஏன் அளக்க வருகிறீர்கள் என்று கேட்டோம். சிட்டா 3 நபர்கள் பெயரில் உள்ளது. அதை எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாக கூறினார்கள். விற்றவர்களை கூட்டி வாங்கள் என்று சொன்னோம். அவர்களை கூட்டி வந்தார்கள். 6 ஏக்கரை பிரித்து கொண்டு மீதி 3.30ஏக்கரை எங்களுக்கு கிரையம் செய்து கொடுப்பதாக கோவிந்தசாமி வழக்கறிஞர் சொன்னார்.

26.04.2024 கிரையம் செய்து கொள்வதாக சொன்னார்கள். கிரையம் பத்திரம் தயார் செய்து டோக்கனும் போடப்பட்டது. ஆனால் கோவிந்தசாமி கையெழுத்து போடவரவில்லை. இது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. அப்போது வக்கீல் கோவிந்தசாமி என் பெயரில் கிரைய பத்திரம் எழுதி கொண்டால் பிரச்சனை வராது என்று சொன்னார். அதனால் தான் பிரச்சனை ஏற்பட்டது. ஆக்சிடண்ட் ஆன இடத்தில் வக்கீல் கோவிந்தசாமியின் போன் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**2, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

26.04.2024 நாங்கள் தயார் செய்த ஆவணத்தையும், டோக்கனையும் போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை. போட்டோவை மட்டும் காட்டினோம். என் பெயரில் வழக்கறிஞர் கோவிந்தசாமி பத்திரம் எழுதி கொள்ளலாம் என்று விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. என் அம்மா சொல்லி தான் என் அப்பா போன் செய்த விவரம் எனக்கு தெரியும். 04.49 மணிக்கு சம்பவ இடத்திற்கு நான் போனேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கும் 3, 4 கிமீ தூரம் இருக்கும்.

2) 4.30மணிக்கு சம்பவம் நடந்ததாக நான் சொல்வதும், 15 நிமிடத்தில் நான் அங்கு சென்று விட்டதாக சொல்வதும் பொய் என்றால்

சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகும் போது என்னுடைய உறவினர்கள் யாரும் இல்லை. அந்த ஊரை சேர்ந்தவர்கள் தான் இருந்தார்கள். என் அப்பா அங்கு விழுந்து கிடந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**7ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்தில் போய் பார்க்கும் போது என் அப்பா நடக்க முடியாத நிலையில் தான் படுத்து இருந்தார். அந்த இடத்திலிருந்து நகர முடியாத நிலையில் இருந்தார். நான் போலிஸ் விசாரணையில் 18.04.2022ல் கிரைய பத்திரம் பதிவு செய்ய டோக்கன் போட்டதாக சொல்லிவிட்டு தற்போது தேதியை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சொத்து வேண்டும் என்று சிவில் வழக்கு எதுவும் போடவில்லை. மொத்த சொத்தும் எங்கள் சுவாதீனத்தில் தான் உள்ளது. தற்போது வழக்கறிஞர் கோவிந்தசாமி பெயரில் நிலமுள்ளது. மற்றவர்கள் பெயரில் உள்ள சொத்தை நாங்கள் எங்கள் சொத்து என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த சொத்து சம்பந்தமாக என் அப்பா மீது ஒரு அடிதடி வழக்கும், கொலை வழக்கும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

என் அப்பா சொத்துக்களை அபகரிக்க வேண்டியும், என் அப்பா பொய்யாக வழக்கு கொடுத்துள்ளார் என்றாலும், அதற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்று கொள்வதாக கூறப்பட்டது.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.